அரசியல் சிந்தனை
நூல் வரிசை

18

# மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்.

சி.அ. யோதிலிங்கம்

வெளியீடு
சமூக விஞ்ஞான ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதந்தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல் வரிசையில் 18 வது நூலாக சி.அ. யோதிலிங்கம் எழுதிய "மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்" என்ற இச் சிறு நூல் வெளிவருகின்றது. மலையகம் பற்றி சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வெளியிடும் மூன்றாவது நூல் இதுவாகும். ஏற்கனவே 5வது நூலாக "மோடியின் இலங்கைப்பயணமும் மலையகமும்" 12 வது நூலாக "மலையக மக்களின் அடையாளம் எது? " என இரண்டு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. "மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும்" என்ற நூல் இலங்கைத் தீவினை மையமாக வைத்து இடம்பெறும் புவிசார் அரசியல் போட்டியில் மலையக மக்களின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகிறது. இப்புவிசார் அரசியல் மலையக அரசியல் சூழலில் அதிகம் பேசப்படாத ஒன்றாகும். "மலையக மக்களின் அடையாளம் எது?" என்ற நூல் மலையக அரசியலில் இன்றும் விவாதிக்கப்படுகின்ற அடையாளப் பிரச்சினை பற்றி பன்முகப்பட்ட நியாயங்களை முன்வைக்கின்றது.

இப்புதிய நூல் மலையக அரசியலின் . இலக்கு பற்றியும் அதனை அடைவதற்கான வழிவரை படம் பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்த விவகாரம் பற்றி மலையக அரசியலில் மேலோட்டமாக பேசப்பட்டதே தவிர விரிவாகப் பேசப்படவில்லை. அரசியல் தீர்வு பற்றிய நெருக்கடி வருகின்ற போது மட்டும் அரசியல் இலக்கு பற்றி உரையாடப்படுகின்றது. ஏனைய காலங்களில் மௌனமே கடைப்பிடிக்கப்படுகின்றது. அரசியல் தீர்வு விடயத்தில் மலையக மக்கள் முன்னணி அதிக பங்களிப்பு செய்தது எனக் கூறலாம். குறிப்பாக அதன் முன்னாள் செயலதிபர் காதர், தற்போதைய செயலதிபர் லோறன்ஸ் என்பவர்களது பங்களிப்பு அளப்பரியது எனினும் ஆரம்பகாலங்களைப் போன்று மலையக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முன்னணி இவ் அரசியல் இலக்கினை முன்னிலைப்படுத்துவதில்லை. கட்சிகளுக்கப்பால் புதிய பண்பாட்டு அமைப்பு, மலையக சமூக ஆய்வு மையம் என்பன காத்திரமான பங்களிப்புக்களை செலுத்தியுள்ளன. சட்டத்தரணி தம்பையாவின் பங்களிப்பினையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

மலையக அரசியலின் வழிவரைபடம் பற்றி போதிய உரையாடல் இதுவரை காலமும் இடம்பெறவில்லை. இப்புதிய நூல் அவ்விடயத்தில் அதிக அக்கறை காட்டியுள்ளது. தேசிய இனப்பிரச்சினை என்பது உள்நாட்டுப்பிரச்சினை அல்ல. சாராம்சத்தில் அது ஒரு சர்வதேசப்பிரச்சினையே! நண்பர்களை சரியாக அடையாளம் காணாமல் சர்வதேச அரசியலை இலகுவாகக் கையாள முடியாது.

இந்நூல் "மலையக அரசியலின் இலக்கும் வழி வரைபடமும்" பற்றி காத்திரமான உரையாடலை நடாத்துவதற்கு அடிப்படைச்சட்டகத்தை தரும் என நம்புகின்றோம். இதனை வளர்த்தெடுப்பது மலையக முன்னேறிய பிரிவினரின் முக்கிய கடமையாகும்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவு போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.
28,செம்மணி வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்றார் சிந்தனையாளர் அரிஸ்ரோட்டில். இதன் அர்த்தம் சமூகத்துடன் இணைந்து கூட்டாகவும் தனியாகவும் வாழ்வதேயாகும். மனிதன் சமூகமாக வாழும் போது தான் கூட்டடையாளத்தையும், கூட்டிருப்பையும் பேணிக் கொள்ள முடியும். அதன் வழி கூட்டுரிமைகளுக்காக போராடவும் முடியும். ஒரு சமூகம் அதன் அடையாளத்தின் பேரால் ஒடுக்கப்படுகின்ற போது அதற்கு எதிராக கூட்டுச் செயற்பாடுகள் மூலம் தான் தனிப்பட்ட நலன்களையும் கூட்டு நலன்களையும் பேணிக் கொள்ளவும் முடியும். கூட்டுரிமைகளைப் போராடிப் பெற்றுக் கொள்ளவும் முடியும். இதனால் ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட பொறுப்புக்கள் இருக்கின்ற அதே வேளை கூட்டுப்பொறுப்பும் இருக்க வேண்டும். இங்கு கூட்டுப்பொறுப்பு என்பது, சமூக நலன்களுக்கான பொறுப்பேயாகும். தன் சமூகத்தில் ஏனையவர்க ளோடு இணைந்து சமூகத்தின் பொது நலன்களுக்காக உழைக்க வேண்டியது ஒவ்வொருவருக்குமுள்ள தார்மீக கடமையாகும்.

நான் மலையக சமூகத்தை சேர்ந்தவனல்ல. அதற்கு வெளியில் தன் விடுதலைக்காக போராடும் வடகிழக்கு சமூகத்தைச் சேர்ந்தவன் ஆனால், மலையக மக்கள் தொடர்பாக மிகுந்த அக்கறையுடையவன், முடிந்தவரை அவர்கள் தொடர்பான தேடல் களை மேற்கொண்டு வருபவன். வடக்கில் குடியேறிய மலையக மக்கள் மத்தியில் புனர்நிர்மாண பணிகளை மேற்கொண்டவர்களில் ஒருவன் எனினும் மலையக மக்களின் அபிலாசைகளை அவர்கள் அனுபவித்து வெளிப்படுத்துவது போல ஒரு அக நிலை நின்ற ஆக்கத்தினை என்னால் கொணர முடியாது. எனவே ஒரு புற நிலையாளன் என்ற வகையில் எனது கருத்துக்களை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் எப்போதும் முடிந்த முடிவுகளல்ல, விவாதங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் உரியவை. கருத்துக்கள் மோதுகின்ற போதுதான் உண்மைகளை தரிசிக்க முடியும். எனவே என்னுடைய கருத்துக்களையும் விவாதத்திற்கும் கலந்துரையாடல்களுக்கும் எடுத்துக் கொள்ளுமாறும் அதே வேளை தவறுகளை மன்னிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

II

மலையக மக்கள் வரலாற்று ரீதியாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ஒரே தடவையில் வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை என்பவற்றை புறரீதியாக எதிர் நோக்குகின்றனர். அதே வேளை மலையக மக்களில் பெரும்பான்மையினர் சாதி ரீதியான ஒடுக்குமுறை, உள்ளக வர்க்க ஒடுக்குமுறை என்பவற்றிற்கு அக ரீதியாகவும் முகம் கொடுக்கின்றனர். எனவே ஒரே சமயத்தில் இன விடுதலையும் வர்க்க விடுதலையும் பெற வேண்டிய நிலைக்கு மலையக மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது தேச அரசியலை முன்னெடுக்க வேண்டிய அவர்கள் அதே தருணத்தில் சமூக மாற்றத்திற்கான அரசியலையும் முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஒரே நேரத்தில் புற ரீதியான ஒடுக்கு முறைக்கும், அக ரீதியான ஒடுக்கு முறைக்கும் எதிராக போராடுகின்ற போது போராட்ட தந்திரோபாயங்களில் அதிக கவனம் எடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனைய தேசங்களை விட மலையக தேசத்திற்கு இதற்கான கட்டாயம் அதிகமாக இருக்கின்றது ஏனெனில் மலையக மக்களில் பெரும்பான்மையினர் அடிநிலை மட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களே! இன விடுதலையையும் பெற வேண்டும் அதே வேளை அந்த விடுதலை அடிநிலை மக்களையும் போய்ச்சேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஒரு தேசப் போராட்டம் என்பது அந்தத் தேசம் புற நிலையிலிருந்து வருகின்ற ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமாகும். இதனால் வர்க்க, சாதி பிரதேச நிலைகள் கடந்து தேசத்தின் அனைத்துப்பிரிவினரையும் இணைக்க வேண்டிய கட்டாயத் தேவை இருக்கின்றது. அதுவும் சிங்கள தேசத்தினால் முற்றிலும் சூழப்பட்ட ஒரு தேசம் வெற்றியடைவதற்கு தனது முழு ஐக்கியப்பலத்தையும் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இதனால் தான் அனைவரையும் இணைத்துக் கொள்ள வேண்டிய தந்திரோபாயங்களை மலையகத்தின் முன்னணி சக்திகள் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

எனது இந்தக்கட்டுரை அகஒடுக்குமுறை பற்றி அதிக கவனத்தினைக் குவிக்கவில்லை. மாறாக புற நிலை ஒடுக்கு முறையான இன ஒடுக்குமுறை பற்றியே கவனம் செலுத்துகின்றது.

இன ஒடுக்குமுறை தொடர்பான மலையகத்தின் இன்றைய அரசியல் நிலையை எதிர்கால பணிகளையும் பற்றி முழுமையாக புரிந்து கொள்வதற்கு மலையக அரசியலின் வரலாற்று வளர்ச்சி, அது இன்று வந்தடைந்துள்ள கட்டம் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.



மலையக மக்கள் சுமார் 100 வருடங்களாக நீண்ட போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர். அவர்கள் அமைப்பு ரீதியாக போராட வெளிக்கிட்ட ஆண்டாக 1919ஆம் ஆண்டினைக் குறிப்பிடலாம். இந்த ஆண்டே சேர். பொன்னம்பலம் அருணாசலமும், பெரிசுந்தரமும் இணைந்து தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற அமைப்பினை உருவாக்கி மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பியிருந்தனர். 1919 ஆம் ஆண்டிலிருந்து 1935 ஆம் ஆண்டுவரை மலையக அரசியலின் முதலாவது கட்டம் எனக் கூறலாம். அன்றைய கால கட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூர ஒடுக்கு முறையாக இருந்த துண்டு முறையினை ஒழிப்பதற்காக இவர்கள் குரல் கொடுத்தார்கள் எனக் கூறப்படுகின்றது. ஆனாலும் இக்கால கட்டத்தினை நகர்த்திய பெருமை நடேசையரையே சாரும். ஏ.ஈ.குணசிங்காவின் தொழிற்சங்கத்தில் உப தலைவராக இருந்த அவர் குணசிங்காவின் இனவாத நடவடிக்கை களால் அதிலிருந்து விலகி தோட்டத் தொழிவாளர் களுக்கென தனியான தொழிற்சங்கமான இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை உருவாக்கி செயற்பட்டார். டொனமூரின் அரசாங்க சபையில் ஹட்டன் தொகுதி உறுப்பினராக 1936 தொடக்கம் 1947 வரை கடமையாற்றியும் இருந்தார். தோட்டங்களுக்கு வெளியார் செல்லக் கூடாது என்ற கட்டளையையும் மீறிச் சென்று தொழிலாளர்களுக்கு விழிப்பூட்டினார்.

1935 தொடக்கம் 1947 வரை மலையக அரசியலின் இரண்டாவது கால கட்டம் எனக் கூறலாம். இக்கால கட்டம் இடதுசாரிக் கட்சிகள் மலையக மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திய கால கட்டமாகும். இடதுசாரிகளே மலையகத்தில் வேலை நிறுத்தம் உட்பட பல போராட்டங்களை அறிமுகப்படுத்தியவர்களாவர். இவர்களினால் நடாத்தப்பட்ட முல்லோயாப் போராட்டம் புகழ் பூத்த ஒன்றாகும். பிரஸ்கேடில் சம்பவம் மலையக அரசியலை மையமாக வைத்தே நிகழ்ந்திருந்தது. (பிரஸ்கேடில் இடது சாரி தொழிற்சங்க நடவடிக்கைகளை மலையகத்தில் நகர்த்துவதற்கு முன்னோடியாக திகழ்ந்த ஒரு ஆங்கிலத் தோட்டத்துரையாவார்) மலையகத்தின் முதல் போராளி கோவிந்தனும் முல்லோயாப் போராட்டத்திலேயே மரணமானார். 1947 வரை மலையக அரசியலில் இன ஒடுக்குமுறை பெரிதளவிற்கு வளர்ச்சியடைந்திருக் கவில்லை. வர்க்க ஒடுக்கு முறையே பிரதானமாகத் தொழிற்பட்டது. இதனால் நடேசயையரும், இடது சாரிகளும் வர்க்க ஒடுக்குமுறைகளிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக கவனம் செலுத்தியிருந்தனர். ஆட்சி அதிகாரம் ஆங்கிலேயரின் கைகளில் இருந்ததினால் இன ஒடுக்கு முறை பெரியளவிற்கு வளர்ச்சியடையவில்லை. ஆனாலும் கொழும்பு நகரத்தில் இந்திய வம்சாவழியினருக்கு எதிரான இனவாதம் 1920 களிலேயே ஆரம்பித்துவிட்டது.

அநகாரிகதர்மபால இந்திய வர்த்தகர்களுக்கு எதிரான இனவாதத்தினைத் தொடக்கி வைத்தார். ஏ.ஈ. குணசிங்கா கொழும்பில் வாழும் இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதத்தினை தொடக்கி வைத்தார். அரச அதிகாரம் சிங்களத்தலைவர்களிடம் இல்லாததினால் அது பெரியளவிற்கு நடைமுறைச் செயற்பாட்டில் எழுச்சியடையவில்லை எனினும் இந்தப் போக்கு நீண்ட காலம் நிலைக்கவில்லை. 1931 இல் அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் யாப்புடன் இனவாத சக்திகள் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு தமது செயற்பாட்டினை முடுக்கி விட்டனர். தமக்குக் கிடைத்த அரை குறை அதிகாரத்தை வைத்துக் கொண்டே நகரத்தில் பணியாற்றிய இந்திய வம்சாவழி அரசாங்க உத்தியோகத்தர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள் போன்றோரை பதவியிலிருந்து நீக்கினர். இந்நிலையில் இவற்றுக்கு முகம் கொடுப்பதற்காகத் தான் நேருவின் வழிகாட்டலில் இலங்கை இந்திய காங்கிரஸ் 1939 இல் உருவாக்கப்பட்டது. 1940 இல் இதனுடைய தொழிற்சங்கமான இலங்கை இந்தியர் தொழிற்சங்கம் மலையகத்தில் பணியாற்ற ஆரம்பித்தது.

இந்திய வம்சாவழியினருக்கு எதிரான இனவாதம் கொழும்பில் ஆரம்பித்தாலும் இக்காலத்தில் மலையகத்தில் முற்றுமுழுதாக அது இடம் பெறவில்லை எனக்கூற முடியாது. 1937 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சிச் சபைச் சட்டம் இதற்கு நல்ல உதாரணமாகும். பண்டாரநாயக்கா உள்ளூராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சராக இருந்த போது கொண்டு வரப்பட்ட இச்சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி தேர்தலில் வாக்காளராகும் உரிமை மலையக மக்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டது. இதை விட அரசாங்க சபைத் தேர்தல்களில் கூட மலையக மக்களின் வாக்கு வீதத்தினைக் குறைப்பதற்காக வாக்குரிமைச்சட்டத்தில் பல கட்டுப்பாடுகள் 1936 தேர்தலின் போது கொண்டுவரப்பட்டன.

மூன்றாவது கால கட்டம் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை வருகின்றது. 1947 இன் சோல்பரி அரசியல் யாப்பு, அதன் பின்னர் 1948 இல் வழங்கப்பட்ட சுதந்திரம் என்பவற்றின் மூலம் இலங்கையின் ஆட்சியதிகாரம் முழுமையாக சிங்களத் தலைமைகளின் கைகளுக்குச் சென்றது. ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவின் பன்முக சமூகத்தன்மையை கவனத்தி லெடுக்காமல் ஒற்றையாட்சி அரசியலை அறிமுகப்படுத்தி விட்டுச் சென்றனர். பல்வேறு இனங்களும் நியாயமான வகையில் அதிகாரத்தை பங்கிட்டுக் கொள்ளும் தன்மை அதிகாரக் கட்டமைப்பில் இருக்கவில்லை.

சிங்களத் தலைமை தென் இலங்கையில் மலையக மக்களின் அரசியல் அடையாளத்தையே இல்லாமல் செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. இரு பிரஜாவுரிமைச்சட்டங்களின் மூலமும், வாக்குரிமைச் சட்டத்தின் மூலமும் மலையக மக்களின் அரசியல் அடையாளத்தை இல்லாமல் செய்தது. மலையக மக்கள் பலவந்தமாக தொழிற்சங்க அரசியலுக்குள் மட்டும் குறுக்கப்பட்டனர். மறுபக்கத்தில் அரச இயந்திரத்தை முழுமையாக சிங்கள மயமாக்கும் முயற்சி நடைபெற்றது. 1950 இல் தேசியக் கொடி, 1956 இன் தனிச்சிங்களச் சட்டம் என்பன சிங்கள மயமாக்கல் செயற்பாட்டில் பிரதான விடயங்களாக இருந்தன. ஏனைய இனங்களுக்கு பாதுகாப்பாக சோல்பரி யாப்பில் காணப்பட்ட 29 ஆவது பிரிவு, கோமறைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன மலையக மக்கள் விடயத்தில் சிறிதளவு பாதுகாப்பைக் கூட கொடுக்கவில்லை. பிரஜாவுரிமைப் பிரச்சினையில் உலக நீதிக்கு புகழ் பெற்ற கோமறைக்கழகமும் கையை விரித்திருந்தது.

இந்த அரசியல் அடையாளப் பறிப்பின் உச்ச நிலை அம்சமாகவே 1964 இல் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் அமைந்தது. மலையக மக்களின் சம்மதமில்லாமலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அரைவாசி இந்திய வம்சாவழி மக்கள் நாடு கடத்தப்பட்டனர். 1974 இல் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - இந்திரா ஒப்பந்தமும் இந்த நாடுகடத்தலில் பங்காற்றியிருந்தது. இந்த நாடுகடத்தலை பச்சையான இன அழிப்பு எனலாம்.

ஏற்கனவே டொனமூர் காலத்தில் நகர்ப்புறங்களில் பணியாற்றியவர்கள் வேலை நீக்கப்பட்டதால் சுயமாக வெளியேறினர். பின்னர் வந்த ஒப்பந்தத்தின் மூலம் பலவந்தமாக நாடுகடத்தப்பட்டனர். இந்த இரு வகை வெளியேற்றங்களினால் 1940 களில் இரண்டாவது பெரிய இனமாக 13 வீதமாக இருந்த இந்திய வம்சாவழியினர் 1981 இல் 5.5 வீதமாக சுருக்கப்பட்டனர்.

சுதந்திரம் கிடைத்தவுடனேயே மலையக மக்களின் அரசியல் அடையாளத்தை பறித்த ஆட்சியாளர்கள் 1972 இன் பின்னர் மலயக மக்களின் கூட்டிருப்பையும் இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதற்காக மேற்கொண்ட பிரதான நடவடிக்கையே மண் பறிப்பாகும் 1972 இல் கொண்டுவரப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டம், 1975 இல் காணி உச்சவரம்புச் சட்டம் என்பன மலையக மக்களை அவர்கள் வளமாக்கிய நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தின. அத் தோட்டங்கள் பெருந்தோட்டத்துறையுடன் எந்தவித தொடர்புமற்ற சிங்கள கிராமவாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதற்கு எதிரான போராட்டத்திலேயே டெவன் தோட்டப் போராளி சிவனு லட்சுமணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கை இந்தியர் காங்கிரசும் பின்னர் பெயர் மாற்றப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இக்காலகட்டத்தினை நகர்த்திய முக்கிய அமைப்பாக இருந்தன. தொண்டமான் பிரதான தலைவராக விளங்கினார். ஏனைய பல தொழிற்சங்கங்கள் தொழிற்பட்ட போதும் இன அரசியலை நகர்த்திய அமைப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினையே குறிப்பிடலாம். மலையக ஆய்வாளர் காதர் இலங்கை - இந்தியர் காங்கிரசினையே மலையகத்தின் முதலாவது தேசிய இயக்கமாகக் குறிப்பிடுகின்றார். 1947 தேர்தலில் இவ்வமைப்பின் சார்பில் 6 பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

நான்காவது காலகட்டம் 1977 தொடக்கம் 2009 வரையிலான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் நீண்ட போராட்டத்தின் வாயிலாக மலையக மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் கிடைத்தது. 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தொண்டமான் நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியிலிருந்து மூன்றாவது அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார்.

அதே வேளை இக்காலகட்டத்தில் தான் வட கிழக்கில் தனிநாட்டுப் போராட்டமும் முனைப்புடன் தொழிற்படத் தொடங்கியது. 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு என பிரச்சாரம் செய்து போட்டியிட்டு வடகிழக்கிலுள்ள 19 தமிழத் தேர்தல் தொகுதிகளில் 18 இனைக்கைப்பற்றியது. அதே வேளை 1977,1983 காலங்களில் இரு இன அழிப்புச்சம்பவங்களும் இடம் பெற்றன. இதில் வடகிழக்குத் தமிழர்கள் மட்டுமல்ல மலையகத் தமிழர்களும் அழிக்கப்பட்டனர். 1983 இலிருந்து 2009 வரை வட - கிழக்கில் பாராளுமன்ற அரசியலுக்கு முதன்மையான இடம் இல்லாமல் போனது. விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்கள் முதன்மையான இடத்தினைப் பெற்றுக் கொண்டன. மலையக இளைஞர்கள் பலரும் இயக்கங்களில் இணைந்து கொண்டனர்.

வட- கிழக்கு நிலைமைகள் மலையகத்திலும் விழிப்புணர்வுகளைக் கொண்டு வரத் தொடங்கின. மலையகம், மலையக தமிழர் என்ற எண்ணக் கருக்களும் வளர்ச்சியடையத் தொடங்கின. மலையக விடுதலையை மையமாக வைத்த தீவிரவாத இயக்கங்களும் மலையகத்தில் தோன்றின. பாராளுமன்ற அரசியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் போட்டி போடக் கூடியளவிற்கு மலையக மக்கள் முன்னணியும் எழுச்சியடைந்தது. 1978இல் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்திற்கான மலையகப் பிரதிநிதி களையும் அதிகரிக்கச் செய்தது. தொழிற்சங்க அரசியலில் இருந்து சற்று விடுபட்டு தேசிய இன அரசியலை நோக்கி மலையக அரசியல் நகரத் தொடங்கியது. "மலையகம் எமது தாயகம் நாம் ஒரு தேசியம்" என்ற கோஷங்கள் எழுச்சியடைந்தன. மலையகத்திற்கான "அதிகார அலகு" கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

மலையக மக்களையும் பாராளுமன்ற அரசியலில் ஈடுபடச் செய்தமை, வடகிழக்குப் போராட்டத்தில் மலையக இளைஞர்களும் இணைந்து விடுமோ என அஞ்சியமை போன்ற காரணங்கள் மலையக மக்களின் ஒடுக்கு முறைகளில் சிறிய நெகிழ்வுகளை ஏற்படுத்தின. இதன் காரணமாக நாடாற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அம்பேகமுவ, நுவரெலியா, பிரதேச சபைகள் மலையக மக்களின் தலைமையில் விடப்பட்டன. கிராமசேவகர்கள், ஆசிரியர் உத்தியோகங்கள் வழங்கப்பட்டன. பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்வுகள் மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் மேலும் தோன்றுவதற்கு காரணங்களாயின. மலையக மக்கள் மேலும் மேலும் தங்கள் கூட்டிருப்பினை ஆதாரப்படுத்துவதற்கான வழிகளைத் தேடத் தொடங்கினர். நுவரெலியா மாவட்டம் மலையக மக்களின் கூட்டிருப்பினை வன்மையாக வெளிப்படுத்தும் மாவட்டமாக வளரத் தொடங்கியது. சிறிபாத கல்விக் கல்லூரி மலையக ஆசிரிய உருவாக்கத்திலும் பெரிய பங்கினை ஆற்றத் தொடங்கியது. ஆசிரிய சமூகம் மலையக சமூகத்தில் முக்கிய சமூக சக்தியாக மாறத் தொடங்கியது.

2009க்குப் பின்னர் மலையக அரசியலின் ஐந்தாவது கட்டம் வருகின்றது. இக்கட்டத்தில் வடகிழக்கு ஆயுதப் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. 2009 தொடக்கம் 2015 வரை போர் வெற்றிவாத அரசு ஆட்சியிலிருந்தது. அது ஏனைய தேசிய இனங்களின் நலன்களில் சிறிது கூட அக்கறை காட்டவில்லை. மறு பக்கத்தில் இலங்கை மீது அக்கறை கொண்ட வல்லரசுகளின் போட்டிக்களமாகவும் இலங்கை மாறியது. மலையக அரசியலும் பலவீன நிலையிலேயே இருந்தது. வெற்றிவாத அரசின் ஜனநாயகமின்மை, சீனச்சார்பு நிலை என்பவற்றால் இந்திய - அமெரிக்க கூட்டு முயற்சியால் 2015 ம் ஆண்டு வெற்றிவாத அரசு தோற்கடிக்கப்பட்டது. ரணில் - மைத்திரி கூட்டரசு அமைக்கப்பட்டது. வரலாற்றில் ஒரு போதும் நிகழாத தேசிய அரசும் உருவாக்கப்பட்டது. 100 நாள் வேலைத்திட்டம். பிரகடனப்படுத்தப்பட்டது. 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

ரணில் - மைத்திரி அரசு வட - கிழக்கு தமிழ் மக்களை பொறுத்த வரை பெரிய அடைவுகள் எவற்றையும் கொடுக்கவில்லை. பெயரளவிலான ஜனநாயகவெளி மட்டும் கிடைத்தது. மறுபக்கத்தில் கட்டமைப்புசார் இன அழிப்பு தொடர்ந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தையும் வவுனியா வடக்கு பிரதேசத்தையும் அபகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் திட்டங்கள் மேடையேற்றப்பட்டன. கன்னியா ஆக்கிரமிப்பு, முல்லைத்தீவு செம்மலை பிள்ளையார் கோவில் ஆக்கிரமிப்பு என கலாச்சார ஆக்கிரமிப்பும் தொடர்ந்தன. எந்தவித உத்தரவாதமும் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்க அரசியல் செய்ததன் மூலம் தன்னையும் பலவீனப்படுத்தி தமிழ்த் தேசிய அரசியலையும் கீழிறக்கியது.

மலையக அரசியலைப் பொறுத்தவரை ரணில் - மைத்திரி கூட்டு அரசாங்க காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. வீடமைப்புத்திட்டங்கள், பிரதேச சபைகளின் அதிகரிப்பு, பிரதேச சபையின் செயல் திட்டங்களுக்குள் தோட்டப்புறங்களும் உள்வாங்கப்பட்டமை, பெருந்தோட் சுகாதாரத்துறை தேசிய சுகாதாரத்துறையுடன் இணைக்கப்பட்டமை மலையக அதிகார சபை என்பன மலையகத் தேசிய இனத்தைப் பெறுத்தவரை சிறப்பான அடைவுகளேயாகும். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உருவாக்கம் இதில் வலிமையான பங்களிப்பைச் செய்துள்ளது. இந்தியப் பிரதமர் மோடியின் மலையகப் பயணம் புவி சார் அரசியலில் மலையகத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டியது.

தற்போது மீண்டுமோர் வெற்றிவாத அரசு அதிகாரத்திற்கு வந்துள்ளது. ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசில் அங்கம் வகிப்பதால் மலையக மக்கள் மீதான கெடுபிடிகளுக்கு வாய்ப்புக்கள் குறைவு. இ.தொ.கா வின் ஆயிரம் ரூபாய் கோரிக்கையை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மலையகப் பல்கலைக்கழக கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அது நிறைவேற்றப் படுமென உறுதியாகக் கூற முடியாது. பாராளுமன்றத் தேர்தலின் பின்னர்தான் நிலைமைகள் பற்றி உறுதியாகக் கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள - பௌத்த வாக்குகளினால் மட்டும் வெற்றியடைந்ததினால் ஆட்சியாளர்கள் சிங்கள - பௌத்த இனவாதத்தையே தூக்கிப் பிடிக்கின்றனர். எதிர்க்கட்சியும் சிங்கள - பௌத்த வாக்குகளை பெறவேண்டும் என்பதற்காக இனவாதத்தை தூக்கிப் பிடிக்க முயற்சிக்கின்றது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டும் இனவாத அரசியலை முன்வைக்க விரும்புவதால் அரச அதிகாரக்கட்டமைப்பு முழுமையாக இனவாதமயப்படும் சூழல் தோன்றியுள்ளது. இப்போக்கு தமிழ், முஸ்லீம் மக்களை மட்டுமல்ல மலையக மக்களையும் வெகுவாகவே பாதிக்கும். இந்நிலையில் மலையக மக்களின் அரசியலை பக்குவமாக தூரநோக்குடன் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

## IV

ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கு தெளிவான இலக்கின் அடிப்படையிலும், அதற்கான வேலைத்திட்டங்களின் அடிப்படையிலும் செயற்படுவது அவசியமானதாகும். இந்த வகையில் மலையக மக்களும் தமது அரசியல் இலக்கினையும் அதை அடைவதற்கான வழிவரை படத்தினையும் தெளிவாக வரையறுத்து செயற்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

மலையக மக்களின் அரசியல் இலக்கு என்ன? ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தங்கள் தலைவிதியை தாங்கள் நிர்ணயிக்கக் கூடிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் அரசியல் அபிலாசைகளை அடைந்து விட முடியாது. மலையக மக்களுக்கும் இவ் அதிகாரங்கள் தேவை. மலையக மக்களுக்கு இரண்டு விதமான அதிகாரப்பகிர்வு தேவை. ஒன்று பிரதேச ரீதியான அதிகாரப்பகிர்வு. மற்றையது சமூக ரீதியான அதிகாரப்பகிர்வு. மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி மாவட்டங்களில் பிரதேச ரீதியான அதிகாரப்பகிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை. ஏனைய இடங்களில் சமூக ரீதியான அதிகாரப்பகிர்வு தேவை. பிரதேச ரீதியான அதிகாரப்பகிர்வுக்கு நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி மாவட்டங்களில் மலையக மக்கள் செறிவாக இருக்கும் பிரதேசங்களை இணைத்து அதிகார அலகு உருவாக்கப்படல் வேண்டும். இவ் அதிகார அலகு நிலத் தொடர்ச்சி அற்றதாகக் கூட இருக்கலாம், ஏனைய பிரதேசங்களில் மலையக மக்கள் ஐதாகவும் வாழ்கின்றனர் அவர்களுக்கு சமூக ரீதியான அதிகாரப்பகிர்வு தேவை. இவ் சமூக அதிகாரப்பகிர்வுமுறை பெல்ஜியத்தில் அமுலில் உள்ளது. மலையக மக்களின் அரசியல் இலக்குகள் இவை தான்.

ஒரு தேசிய இனத்தின் அரசியல் இலக்கினை எவ்வாறு அடையப் போகிறோம் எனக் கூறுவதே வழி வரை படம் ஆகும். மலையக மக்களுக்கான வழி வரை படத்தில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை உண்டு. **அதில்** முதலாவது மலையக அரசியல் இலக்கையும், அதற்கான நியாயப்பாடுகளையும் புலமை நிலையில் தர்க்க ரீதியாகத் தொகுத்து மலையக மட்டத்திலும், இலங்கை மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பேசு பொருளாக்குவதாகும்.

இரண்டாவது மலையகத்துக்கென ஒரு தேசிய அரசியல் இயக்கத்தை உருவாக்குவதாகும். இத்தேசிய அரசியல் இயக்கம் மலையக அரசியல் கட்சிகளையும், மலையகத் தொழிற் சங்கங்களையும், மலையக பொது அமைப்புக்களையும் இணைத்ததாக இருத்தல் வேண்டும். ஐக்கிய முன்னணி என வருகின்ற போது கொள்கை நிலைப்பாடு, சமத்துவம், அமைப்புப் பொறிமுறை என்பன உறுதியாக இருக்க வேண்டும். கட்சி முரண்பாடுகளும், தொழிற்சங்க முரண்பாடுகளும், நிலவுகின்ற சூழலில் இத் தேசிய அரசியல் இயக்கத்தை உருவாக்குவது கடினமாக இருக்கும். பொது அமைப்புகளும், மலையக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியாளர்களும் இதற்கான வலுவான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். பொது வேலைத்திட்டங்களில் இணைந்து செயற்பட்டு அதன் வளர்ச்சியில் ஐக்கிய முன்னணியை உருவாக்கலாம்.

மூன்றாவது சேமிப்புச்சக்திகளையும் நட்புச் சக்திகளையும் மலையக அரசியலுக்கு பின்னே அணி திரட்டுவதாகும். மலையக மக்களைப் பொறுத்த வரை அடிப்படை சக்திகளாக இருப்பவர்கள் மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களும் அதன் நீட்சியாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், தமிழ் நாட்டிலும், புலம் பெயர் நாடுகளிலும் வாழும் மலையக வம்சாவழித் தமிழர்களாவர். சேமிப்புச் சக்திகளாக இருப்பவர்கள் வடகிழக்குத் தமிழர்கள், உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்கள் என்போராவர். நட்புச்சக்திகளாக இருப்பவர்கள் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர். மலையகம் சிங்கள தேசத்தினால் சுற்றிவளைக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருப்பதனால் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு மிக மிக அவசியமானதாகும்.

நான்காவது புவிசார் அரசியலில் மலையக மக்களும் பங்காளிகளாக மாறுவதாகும். இலங்கைத் தீவினை மையமாக வைத்து இடம் பெறும் புவிசார் அரசியல் போட்டியில் மலையக மக்களும் கௌரவமான பங்காளிகளாவர். இதனால் தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மலையகத்திற்கும் பயணம் செய்தார். இலங்கைத் தீவினை மையமாக வைத்து புவிசார் அரசியல் போட்டி இடம் பெறும் போது அங்கு வாழும் அனைத்து தேசிய இனங்களும் அதில் பங்காளிகளாக மாறுவது தவிர்க்க முடியாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது மலையகத் தேசிய இனத்தை தாங்கும் தூண்கள் அழிக்கப்படுவதனை தடுப்பதற்கு வலுவான பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்கி செயற்படுத்துவதாகும். ஒரு தேசிய இனத்தை தாங்கும் தூண்களாக இருப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவையே! இத்தூண்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல் தான் மலையக அரசியல் பிரச்சினை எனலாம். மலையக நிலம் நாளுக்கு நாள் பறிக்கப்படுகின்றது. தமிழ் மொழி அரச கரும மொழியாக உள்ள போதும் மலையக மக்களின் ஆட்சியில் இருக்கும் பிரதேச சபைகளில் கூட தமிழ் மொழி முழுமையான ஆட்சி மொழியாக வரவில்லை. மலையக மக்களின் அடிப்படைப் பொருளாதாரம் பெருந்தோட்டத் துறையே! அதுவே மலையக மக்களுக்கு பேரம் பேசும் பலத்தையும் வழங்குகின்றது. இன்று அது பல வழிகளிலும் சிதைக்கப்படுகின்றது. மலையக மக்களை ஒன்றிணைக்கின்ற கலாச்சாரம் பல்வேறு வகையான வெளி ஊடுருவல்களினால் தனது அடையாளத்தை இழந்து வருகின்றது.

ஆறாவது சமூக மாற்ற அரசியலையும் முன்னெடுப்பதாகும். வட கிழக்கைப் போலவே மலையகத்திலும் சாதி, மத, பிரதேச பால் முரண்பாடுகள் உள்ளன இவை அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானதாகும். தவிர தேசம் என்பது மக்கள் திரளாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞையாகும். அதனடிப்படையில் மலையகத் தேசியம் என்பது மலையக தமிழ் மக்களின் கூட்டுப் பிரக்ஞையாகும். மக்கள் திரளுதல் என்பது இங்கு முக்கியமானது. மக்கள் சாதி, மத, பிரதேச பால் என பிளவு பட்டிருந்தால் ஒரு தேசமாக திரள முடியாது. எனவே மலையகத் தேசியத்தை ஒரு கட்டுறுதியான தேசியமாக வளர்த்தெடுப்பதற்கும் சமூக மாற்ற அரசியல் அவசியம். மலையகத்தேசியம் சமூகமாற்ற அரசியலை உள்ளடக்கும் போதே இது சாத்தியமானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது சர்வதேச அரசியலை கையாளல் ஆகும். தேசிய இனப்பிரச்சினை சாராம்சத்தில் உள்நாட்டுப்பிரச்சினையல்ல. சர்வதேச பிரச்சினையே! பேராசிரியர் சிவத்தம்பி "சர்வதேச அரசியல் மூலமே ஒரு தேசிய இனத்தின் வெற்றி தீர்மானிக்கப்படும்" என்றார். மலையக அரசியல் பிரச்சினை தமிழ்நாட்டில் கூட இன்னமும் பேசுபொருளாகவில்லை. சர்வதேச மட்டத்தில் இதனை பேசு பொருளாக்கவேண்டும். மலையகத்தை சர்வதேசத்திற்கு கொண்டுபோதல் வேண்டும். சர்வதேசத்தை மலையகத்திற்கு கொண்டு வரவேண்டும்.

இதில் பிரித்தானியாவுடனான உறவினை கையாளுதலும், இந்தியாவுடனான உறவினைக் கையாளுதலும் மிக முக்கியமானது. இரண்டு நாடுகளும் மலையக மக்களுடன் நெருக்கமான தொடர்புகளைக்கொண்டவை. பிரித்தானியாவே மலையக மக்களை குடியமர்த்தியது. தான் குடியமர்த்திய மக்கள் தொடர்பாக ஒரு தார்மீக பொறுப்புணர்வு அதற்கு உண்டு அதனைத் தட்டிக்கேட்பதற்கு மலையக மக்கள் தயங்கக்கூடாது.

மலையக மக்கள் இந்திய பூர்வீகத்தைக்கொண்டவர்கள் என்ற வகையிலும், சிறீமாசாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்களை பலவீனப்படுத்திய நாடு என்ற வகையிலும் இந்தியாவிற்கும் பொறுப்புணர்வு உண்டு. இந்த வகையில் இந்தியாவையும் தட்டிக்கேட்பதற்கு மலையக மக்கள் தயங்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இறுதியாக மலையக அரசியல் தொடர்பாக அடிப்படையான சில கருத்துக்களை நான் முன்வைத்திருக்கிறேன். தீர்வினை மலையக மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன ஒடுக்க முறைக்கு உள்ளான ஒரு சமூகம் ஏதாவது ஒரு வகையில் அரச அதிகாரக் கட்டமைப்பில் ஒரு சமூகமாக பங்கு பெறாமல் அச்சமூகத்தின் அரசியல் அபிலாசைகளை பெற்றுக் கொள்ள முடியாது என்பது பொதுவான உண்மையாகும். அதிகார வடிவங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அச்சமூகங்கள் திர்மானித்துக் கொள்ளலாம்.

மற்றைய சமூகங்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் ஒவ்வொரு சமூகமும் தமக்கான அதிகார வடிவங்களை தீர்மானித்துக் கொள்வதற்கு அவற்றிற்கு மறுக்க முடியாத உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டங்களில் சனத்தொகை, – அட்டவணை – 01

| வருடம் | தோட்டங் களின் எண்ணிக்கை | தோட்டங் களில் உள்ள சகல இன மக்கள் | ஆண்கள் | பெண்கள் | தோ.வே: அமர்த்தப் பட்ட இ.மக்கள் |
|---|---|---|---|---|---|
| 1871 | 996 | 1,23,654 | 81,362 | 42,292 | 1,09,444 |
| 1901 | 1,857 | 4,41,601 | 2,46,922 | 1,94,679 | 4,36,622 |
| 1911 | 1,833 | 5,13,467 | 2,78,558 | 2,34,909 | 4,40,285 |
| 1921 | 2,367 | 5,68,850 | 3,00,867 | 2,67,983 | 4,93,944 |
| 1931 | 3,288 | 7,89,934 | 4,16,387 | 3,73,547 | 6,92,540 |
| 1946 | | 8,51,359 | | | 6,65,853 |
| 1953 | | 10,08,653 | | | 8,09,084 |
| 1963 | | 11,46,297 | | | 9,43,793 |
| 1971 | | 11,61,611 | | | 9,51,785 |

## 1.2 தோட்டத்திற்கு புறம்பாக மலையகத் தமிழர்

மலையகப் பிரதேசங்களில் தோட்டங்களை உருவாக்கியதுடன், இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைப்பதிலும் பெரும் பங்காற்றிய வர்களும் இவர்கள் தான். இலங்கை அரசாங்கத்தின் பொது வேலைத் திணைக் களத்திலும் வேலை செய்ய இந்த இந்தியத் தொழிலாளர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளார்கள் என்பதை கீழ்காணும் அட்டவணை உறுதிப்படுத்துகிறது.

புகையிரதத் திணைக்களத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் – அட்டவணை 11

| 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 |
|---|---|---|---|---|---|---|
| | | 2,804 | | 1,941 | 4,274 | 1,873 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது வேலைத் திணைக்களத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் – அட்டவணை 111

| | 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 4,648 | 12,470 | 6,750 | 7,398 | 12,368 | 20,175 | 21,651 |
| ஊவா மாகாணம் | 45 | 362 | 941 | 533 | 1,149 | 2,664 | 2,463 |
| சப்ரகமுவ மாகாணம் | 86 | 86 | 156 | 3,640 | 86 | 1,568 | 3,126 |
| மேல் மாகாணம் | | 75 | | | | 21 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். –
சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். – சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் – 2017 – நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும்.
சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். – கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட – கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சிகைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். –
சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு – 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் – 01 – சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும்
கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? – சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் –
சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் – நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும்
சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் – சி.த. காண்டீபன்,
சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள்
– நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org